# அமைதியின் தூதனாய்

அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே (2)
அன்பனே இறைவனே.. என்னிலே வாருமே
அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே

பகைமை உள்ள இடத்தில்.. பாசத்தை வளர்க்கவும் (2)
வேதனை நிறைந்த மனதில்.. மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில்.. நம்பிக்கை ஊட்டவும்

அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே

தளர்ச்சி ஓங்கும் பொழுது.. மனதிடம் தழைக்கவும் (2)
இருளே சூழும் வேளை.. ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம்.. உதயம் காணவும்

அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே

ஆறுதல் அன்பை அளித்து.. புரிதலை வளர்க்கவும் (2)
கொடுப்பதில் நிறைவு கண்டு.. மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்து புதிய.. உலகம் படைக்கவும்

அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே (2)
அன்பனே இறைவனே.. என்னிலே வாருமே
அமைதியின் தூதனாய்.. என்னையே மாற்றுமே